

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரத்தினம் தலைமையில், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தின் துவக்கத்தில் கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு அமைச்சர், நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவுக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் ஜெ.ஹெலன் டேவிட்சன், என்.தில்லைசெல்வம், என்.சுரேஷ்ராஜன், வி.ஜோசப் ராஜ், எ.பாபு வினிபிரட், கரோலின் ஆலிவர்தாஸ், பூதலிங்கம்பிள்ளை, ஐ. கேட்சன், எஸ்.ஆனந்த், ரீதர், வி.பி.செல்வகுமார் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு – மேயர் ரெ.மகேஷ் சிறப்புரை!

கன்னியாகுமரி, அக். 15 -
கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 13.10.2024, ஞாயிறு அன்று மாலை 5.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜ ரத்தினம் தலைமையில், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தின் துவ க்கத்தில் கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவுக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை யாற்றினார்கள்.

கூட்டத்தில் மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் என். தில்லைசெல்வம், தணிக்கைக்குழு உறுப்பினர் என்.சுரேஷ்ராஜன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் வி.ஜோசப் ராஜ், அயலக அணி துணைச் செயலாளர் எ.பாபு வினிபிரட், மாவட்ட துணை செயலாளர்கள் கரோலின் ஆலிவர்தாஸ், பூதலிங்க ம் பிள்ளை, மாவட்ட பொருளாளர் ஐ. கேட்சன், ஒன்றிய கழக செயலாளர்கள், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் எஸ்.ஆனந்த் (தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர்), கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ரீதர் ரொட்ரிகோ (தூத்துக்குடி தெற்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர்), குளச்சல் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வி.பி.செல்வகுமார் (தூத்துக்குடி தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்) உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் எண்: 1**

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதலமைச்சராக நியமனம் செய்த கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது. மேலும் திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பணி சிறக்கவும் இக்கூட்டம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் எண்: 2**

கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சி பணிகளை துரிதப் படுத்தவும் மற்றும் இதர பணிகளை கண்காணித்திடவும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களை நியமனம் செய்த கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**இரங்கல் தீர்மானம்:**

10.10.2024 அன்று காலம் சென்ற தலைவர் அவர்களின் மருமகனும், முரசொலி மாறன் அவர்களின் தம்பியும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மைத்துனர், சகோதரி செல்வி அவர்களின் கணவர் என பல முகவரிகள் இருந்தாலும், முரசொ லிக்காக அவர் ஆற்றிய துணிச்சலான பணிகளும், அதனால் அவர் சந்தித்த நெருக்கடிகளும் திராவிட இதழியல் வரலாற்றில் போற்றத்தக்கவையாகும். திராவிட இதழியலின் தீச்சுடராக திகழ்ந்தார். எனவே தான் முரசொலி செல்வம் என்ற அழுத்தமான அடையாளம் அவருக்கு பெருமை சூட்டுவதாக அமைந்தது. அன்னாரின் மறைவிற்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மக்களின் உரிமைகளை மதியுங்கள்; ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துங்கள்! இல்லையெனில்

# மோடி அரசே; வரலாறு உங்களை மன்னிக்காது!

## “தீக்கதிர்” நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக். 15-
மக்களின் உரிமைகளை மதியுங்கள்; ஜனநாயகத்தை உண்மையான பொருளில் நடைமுறைப் படுத்துங்கள், இல்லையெனில் மோடி அரசே! வரலாறு உங்களை மன்னிக்காது என ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவிக்கப் பட் டுள்ளது.



தீக்கதிர்

2024 அக்.14 திங்கட்கிழமை

மோடி ஆட்சியில் மனித உரிமைகள்: பேரா.சாய்பாபா மரணம் ஒரு சாட்சி!

பேராசிரியர் ஜி.என். சாய்பாபாவின் மறைவு இந்திய ஜனநாயகத்தின் மீது விழுந்த கருங்கறையாகும். இது வெறும் ஒரு தனிமனிதரின் இழப்பல்ல; நமது நாட்டின் நீதி அமைப்பின் சீரழிவையும், மோடி அரசின் மனித உரிமை மீறல்களின் உச்சகட்டத்தையும் வெளிச்சமிட்டுக் காட்டும் சோக நிகழ்வாகும்.

மோடி அரசின் ஒடுக்குமுறைக் கொள்கைகளின் நேரடிப் பலியாக பேரா.சாய்பாபா மாறினார். பத்தாண்டுகள் சிறையில் வாடிய இவர், அடிப்படை மனித உரிமைகள் கூட மறுக்கப்பட்ட நிலையில் கொடூரமான சிறைவாசத்தை அனுபவித்தார். மாற்றுத்திறனாளி என்றும் பாராமல், அவருக்கு மிகவும் அவசியமான மருத்துவ சிகிச்சை கூட தொடர்ந்து மறுக்கப்பட்டது. பல

அது வருமாறு:-

பேராசிரியர் ஜி.என். சாய்பாபாவின் மறைவு, இந்திய ஜனநாயகத்தின் மீது விழுந்த கருங்கறை யாகும். இது வெறும் ஒரு தனிமனிதரின் இழப் பல்ல; நமது நாட்டின் நீதி அமைப்பின்சீரழிவையும், மோடி அரசின் மனித உரிமை மீறல்களின் உச்ச கட்டத்தையும் வெளிச்ச மிட்டுக் காட்டும் சோக நிகழ்வா கும்.

மோடி அரசின் ஒடுக்கு முறைக் கொள்கைகளின் நேரடிப் பலியாக பேரா. சாய்பாபா மாறினார். பத்தாண்டுகள் சிறையில் வாடிய இவர், அடிப் படை மனித உரிமைகள் கூட மறுக்கப்பட்ட நிலையில் கொடூரமான சிறை வாசத்தை அனுபவித்தார். மாற்றுத்திறனாளி என்றும் பாராமல், அவருக்கு மிகவும் அவசியமான மருத்துவ சிகிச்சை கூட தொடர்ந்து மறுக்கப்பட்டது. பல ஆண்டுகளாக ஜாமீன் கோரி போராடியும் அது நிராகரிக்க ப்பட்டது. இது நமது நீதித்துறையின் மனசாட்சியற்ற போக்கையும் காட்டுகிறது.

நீதிக்காகப் போராடிய ஓர் அறிவுஜீவியின் வாழ்க்கை இவ்வாறு கசப்பான முடிவுக்கு வந்திருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது. சித்திரவதைகளை எதிர்கொண்டும், தன் கொள்கைகளில் உறுதியாக நின்ற சாய்பாபாவின் துணிச்சல் போற்றுதலுக்குரியது. அவரது மரணத்திற்கான முழுப் பொறுப்பும் மோடி அரசே ஏற்கவேண்டும்.

மனித உரிமைகள், சமூக நீதி என்ற பெயரில் மோடி அரசு பேசும் அனைத்தும் வெறும் வெற்று வார்த்தைகளே என்பதை சாய்பாபாவின் வாழ்க்கையும் மரணமும் நமக்குத் துல்லியமாகக் காட்டுகின்றன. சர்வதேச ஒப்பந்தங்களையும், உள்நாட்டுச் சட்டங்களையும் மீறி, ஒரு மாற்றுத் திறனாளியை இவ்வளவு கொடூரமாக நடத்திய அரசு, மக்களின் நம்பிக்கையை முற்றிலும் இழந்துவிட்டது.

இந்த அரசின் கீழ், கருத்து சுதந்திரம் என்பது வெறும் கற்பனையாகி விட்டது. மாற்றுக் கருத்து கொண்டவர்கள் அனைவரும் தேசத்துரோகிகளாகக் கருதப்படுகின்றனர். அவர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டு, சிறையில் அடைக்கப்படுகின்றனர். சாய்பாபா, வரவர ராவ், சுதா பரத்வாஜ் போன்ற அறிவுஜீவிகளின் வாழ்க்கையே இதற்குச் சாட்சி.

சாய்பாபாவின் மரணம் நம் ஒவ்வொருவரையும் சிந்திக்க வைக்க வேண்டும். மோடி ஆட்சியில் நடக்கும் கொடூரங்களை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டும். மாற்றுக் கருத்து கொண்ட வர்களை அடக்குவதற்குப் பதிலாக, அவர்களு டன் உரையாட வேண்டும். அப்போதுதான் உண்மையான ஜனநாயகம் மலரும்.

இந்த அரசின் கொள்கைகள் மாற்றப்பட வேண்டும். மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். நீதித்துறை சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். இல்லையெனில், இந்தியாவின் ஜனநாயகம் வெறும் பெயரளவிலேயே இருக்கும்.‘

மோடி அரசே, மக்களின் உரிமைகளை மதியுங்கள். ஜனநாயகத்தை உண்மையான பொருளில் நடைமுறைப்படுத்துங்கள். இல்லையெனில், வரலாறு உங்களை மன்னிக்காது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

வீரத்தாய் குயிலிக்கு முழு திருவுருவ வெண்கலச் சிலை அமைத்துத் தந்த

# தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - அருந்ததியர் சமூகம் சார்பில் நெஞ்சார்ந்த நன்றி!

## ஆதித்தமிழர் பேரவை அதியமான் பேச்சு!

சிவகங்கை, அக். 15 -
தமிழ் மண்ணை காத்திடும் போரில் ஆங்கிலேயருக்கு எதிரான மிகப் பெரிய தாக்குதலை அச்சமின்றி அரங்கேற்றி தன்னுயிரைத் தந்த அருந்ததியர் இனத்தின் மங்கையர் வீரத்தாய் குயிலி அவர்களின் நினைவு தினம் சிவகங்கையில் 12.10.2024 அன்று அனுசரிக்கப்பட்டது.

வீரத்தாய் குயிலியின் மாபெரும் தன்னுயிர் ஈகத்தை போற்றும் விதத்தில் குயிலியின் முழு திருவுருவ வெண்கலச் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைத்து தந்ததற்கு நன்றி தெரிவித்து பாராட்டும் விதத்தில் பொதுச் செயலாளர் கோவை இரவிக்குமார் முன்னிலையில் ஆதித்தமிழர் பேரவை சார்பில் மதுரை முதல் சிவகங்கை வரை நன்றி பாராட்டு விழா வாகன அணிவகுப்பு பேரணி நடைபெற்றது.

பேரணி இறுதியில் சிவகங்கை வேலுநாச்சியார் மணி மண்டப வளாகத்தில் தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப் பட்ட வீரத்தாய் குயிலியின் முழு திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்த அதியமான் தலைமையில் ஆதித்தமிழர் பேரவையினர் வீர வணக்க மரியாதை செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அதியமான் பேசியதாவது: நம்முடைய வீரமங்கை குயிலியினு டைய நினைவு நாளை நாம் பல ஆண்டுகளாக கடைப்பிடித்து வருகின்றோம்.

இது நாள் வரை அருகிலிருக்கும் நினைவுத் தூணிலே வீர வணக்கம் செலுத்தி வந்தோம்.

நமது ஆதித்தமிழர் பேரவை சார்பிலே வீரமங்கை குயிலி அவர்களுக்கு நினைவு மண்டபமும் சிலையும் வேண்டும் என்று தமிழக முதல்வர் - தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் ஒரு கோரிக்கையை முன் வைத்தோம்.

கோரிக்கையை ஏற்றுக் கொண்ட முதல்வர் அவர்கள் முதலில் சிலை நிறுவுவதற்கு ஆணையும் ரூபாய் 50 லட்சமும் ஒதுக்கீடு செய்தார்.

அதை நிறைவேற்றி இன்றைக்கு சிலையும் நிழல் மண்டபமும் அமைத்து கடந்த இரு தினங்களுக்கு முன்பு காணொளி வாயிலாக தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இதற்கு நாம் முதலில் தமிழக முதல்வர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஒட்டு மொத்த அருந்ததியர்கள் சார்பிலும் ஆதித்தமிழர் பேரவை சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்ந்து நமது பேரவையின் கோரிக்கையை ஏற்று மகுடஞ்சாவடி மாநாட்டிலே மாவீரன் பொல்லானுக்கு நினைவு மணி மண்டபம் அமைக்கப்படும் என நம்மிடையே வாக்குறுதி கொடுத்தார்கள்.

அன்றைய எதிர்க்கட்சி தலைவரும் இன்றைய முதலமைச்சருமான தி.மு.க. தலைவர் மு.. ஸ்டாலின் அவர்கள்.

அதனடிப்படையில் இன்றைக்கு மாவீரன் பொல்லான் அவர்களுக்கு நினைவு மணி மண்டபம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

அதனுடைய கட்டுமான பணிகள் நடந்து கொண்டிருக்கிறது.

அதே போல மாமன்னர் ஒண்டிவீரன் அவர்களுக்கும் 2008 லே கோரிக்கை வைத்தோம், செயல்படுத்தினார்கள். ஆனால் முழுமை அடையவில்லை.

இன்றைக்கு மூன்று விடுதலை போராட்ட தலைவர்களுக்கு நினைவு சின்னத்தை எழுப்பியிருக்கிறார்கள். இதிலே பூலித்தேவன் படையிலே இருந்து வெண்ணிக் காலாடி அவர்களுக்கும் சிலையை திறந்து இருக்கிறார்கள்.

வீரத்தாய் குயிலி அவர்கள் சிலை திறக்கும் போதே வெண்ணி காலாடி என்ற தலைவருக்கும் ஒரு சிலையை திறந்து இருக்கிறார்கள்.

அந்தச் சிலையை பார்த்தோமேயானால் குதிரை மேல் வாள் வைத்துக் கொண்டிருப்பதைப் போல சிலையை வைத்திருக்கிறார்கள்.

நாமும் அதைப் போலத்தான் ஒண்டி வீரனுக்கும் வைக்கச் சொல்லி தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இப்போதிருக்கிற ஒண்டி வீரன் சிலையைப் பார்த்தால் கற்ப கிரகத்தில் இருப்பது போல் கோவிலுக்குள் இருப்பது போல் இருக்கிற மாதிரி உள்ளே வைத்திருக்கிறார்கள். அப்படி இருக்கக் கூடாது.

போராட்டத்தின் வீரரான ஒண்டி வீரன் சிலையை வெளியே கொண்டு வந்து பெரிய பீடம் மீது ஒண்டி வீரன் சிலை அமைத்து கையில் வாளை ஏந்தி இருப்பதைப் போல் வைக்க வேண்டுமென இப்போதிருக்கிற முதல்வர் அவர்களிடம் கோரிக்கை கொடுத்திருக்கிறோம்.

ஆக இந்த ஒண்டி வீரன், குயிலி, பொல்லான் ஆகிய மூவரும் அருந்ததியர் இனத்தைச் சேர்ந்த வரலாற்றுத் தலைவர்கள்.

இவர்களை அபகரிப்பதற்கு ஒரு சிலர் தொடர்ந்து முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதை வைத்து சில பிரச்சினைகளை எழுப்புவதற்கு கூட தயாராக இருக்கிறார்கள். அதைப்பற்றி நமக்கு கவலை இல்லை.

வரலாறோ வரலாற்று அறிஞர்களோ மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். குயிலி அருந்ததியர் வம்சத்தை சார்ந்தவர் என்று.

சிலர் இடையில் வந்து வரலாற்றை திருடிக் கொண்டு எங்கள் தலைவர் என்று உளறிக் கொண்டிருக்கிறார்கள் இதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

ஆக இன்றைக்கு நமக்கான அரசு இருக்கின்ற காரணத்தால் நாம் வைக்கின்ற கோரிக்கைகளை மிகச் சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கல்ல முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே குயிலி அருந்ததியர் சமுதாயத்தைச் சார்ந்தவரென்று பல பேர் கூறியிருக்கிறார்கள்.

பல தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

குயிலி எங்களுக்கானவர் என சொல்லிக் கொள்ளும் வரலாற்று திருடர்கள் அப்போது எங்கே போனார்கள்.

அப்போது ஏன் ? அமைதியாக இருந்தார்கள் என தெரியவில்லை.

இப்போது தான் வருகிறார்கள்.

ஏனென்றால் நாம் முன்னேற்றம் அடைவது சிலருக்கு பிடிக்கவில்லை.

வயிற்றெரிச்சலோடு பார்க்கிறார்கள்.

அருந்ததியர்களுக்கு மூன்று தலைவர்களா

பொல்லான் இருக்கிறார்.

குயிலி இருக்கிறார்.

ஒண்டி வீரன் இருக்கிறார்.

இது மட்டுமல்ல இன்னும் நிறைய பேர் இருக்கிறார்கள்.

மதுரை வீரன் என்ற தலைவர் மிகப்பெரிய போர் வீரன் அவருக்கு மிகப்பெரிய நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் அதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கிறது.

கந்தன் பகடை.

முத்தன் பகடை.

பொட்டி பகடை என இன்னும் ஏராளமான தலைவர்கள் இருக்கிறார்கள். ஏனென்றால் பகடை என்பவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக தாய் மண்ணைக் காப்பதில்

தியாகத் தலைவர்களாக மாறிக் கொண்டவர்கள்.

தியாகி என்று சொல்லிக் கொள்ளும் நாம் சுதந்திர போராட்டத்தில் பங்கேற்று தியாகிகள் பென்சன் வாங்குகிறார்களா? என்று பார்த்தால் யாருமே வாங்க வில்லை?

ஏன் வாங்க வில்லை என்று சொன்னால் அந்த தியாக நாட்கள் ஆனதை ஆவணப்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் சிந்தனையும் இல்லாமல் போய் விட்டது எதையுமே ஆவணப்படுத்த வில்லை இப்பொழுது ஆவணபடுத்த ஒன்றுமே இல்லை.

சில சாதியைச் சார்ந்தவர் ஒரு இடத்திலே ஒதுங்கி இருப்பார்கள். அப்பொழுது ஆங்கிலேய போலீஸ் வந்து அவரது தலையில் அடித்து ரத்தம் சிந்தி யுள்ளது. அவர் இப்பொழுது மிகப் பெரிய தியாகி, ஊர் பூரா சிலை, அவங்க வாரிசு இப்ப வரைக்கும் பென்சன் வாங்குகிறார்கள்.

நாம் நிறைய தலைவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம் ஆனால் அதற்கான ஆவணத்தை தவறவிட்டோம்.

மாவீரன் பொல்லான் பயன்படுத்திய ஆயுதங்கள், செருப்பு, தலைக்கவசம் போன்றவற்றை ஈரோட்டிலே நம் தோழர்கள் வைத்திருக்கிறார்கள் இவ்வளவு ஆதாரங்கள் வைத்துக் கொண்டுள்ள நாம் தியாகி பென்சனோ, வேறு எதுவுமே வாங்க முடிவதில்லை.

நம்மைப் பொருத்த வரை நமக்கு நிறைய வேலைகள் இருக்கிறது. யார் என்ன சொன்னாலும் அதைப் பற்றி நாம் கவலை அடைய தேவையில்லை.

மிக சமீபத்திலே உள் ஒதுக்கீடு குறித்து மிகப் பெரிய பிரச்சினை எழுந்தது. ஆனால் இதைப்பற்றி மிகச் சிறந்த தீர்ப்பை உச்ச நீதி மன்றம் கொடுத்திருக்கிறது. இதற்கு என்ன காரணம் இந்த 15 வருடத்திலே நாம் முன்னேறியது அவர்களுக்கு பிடிக்கவில்லை.

அவர்களுக்கு பிடிக்கவில்லை என்பதால் நமக்கு கவலை இல்லை.

நாம் கல்வி என்பதன் மூலம் வேலை வாய்ப்பு பெற்று அரசியல் அதிகாரம் நோக்கி செல்வோம்.

நமக்கு நிறைய வரலாறு இருக்கிறது. தமிழ்நாட்டில் வீரன் என்ற சொல் பெற்ற எந்த சாதியும் கிடையாது இன்றைக்கு பல்வேறு தாக்குதலுக்கு உள்ளாகி கொண்டிருக்கிறோம். இருந்த போதிலும் அதை நாம் எதிர் கொள்ள தயாராகிக் கொள்வோம்.

வீரத்தாய் குயிலி அவர்களின் வரலாறை நம்மை விட மற்றவர்கள் நன்கு அறிந்து கொண்டு மிகப் பெரிய அளவில் தெரிந்து வைத்துள்ளார்கள்.

நாமும் நம்முடைய தலைவர்கள், போராளிகள், வீரர்களின் வரலாற்றை தோண்டி எடுத்து மக்களிடம் கொண்டு செல்வோம். இப்படிப் பட்ட வரலாறை நிச்சயமாக அழித்து விட முடியாது. நம்மிடம் இருந்து பிடுங்கிச் செல்லவும் முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு குயிலி அவர்களுக்கு திருவுருவ வெண்கலச் சிலை அமைத்துத் தந்த தி.மு.க. தலைவர் - தமிழக முதல்வர் அவர்களுக்கு அருந்ததியர்கள் சார்பிலும் ஆதித்தமிழர் பேரவை சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

சிவகங்கை மாவட்டச் செயலாளர் கண்ணபிரான் நன்றி தெரிவித்தார்.

இவ்வணிவகுப்பு பேரணியில் 75 க்கும் மேற்பட்ட வாகனங்களும்

மாநில மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் மற்றும் அணி பொறுப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் திரளாக கலந்து கொண்டனர்.



வீரத்தாய் குயிலியின் மாபெரும் தன்னுயிர் ஈகத்தைப் போற்றும் விதத்தில் அன்னாரது முழு திருவுருவ வெண்கலச் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைத்து தந்ததற்கு நன்றி தெரிவித்து பாராட்டும் விதத்தில் பொதுச் செயலாளர் கோவை இரவிக்குமார் முன்னிலையில் ஆதித்தமிழர் பேரவை சார்பில் மதுரை முதல் சிவகங்கை வரை நன்றி பாராட்டு விழா வாகன அணிவகுப்பு பேரணி நடைபெற்றது.பேரணி இறுதியில் சிவகங்கை வேலுநாச்சியார் மணி மண்டப வளாகத்தில் தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட வீரத்தாய் குயிலியின் முழு திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்த அதியமான் தலைமையில் ஆதித்தமிழர் பேரவையினர் வீர வணக்க மரியாதை செய்தனர்.